வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 24.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- அமெரிக்க செயற்கைக் கோளை, இன்று, LVM-3 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- ஆரவல்லி மலைத் தொடர் குறித்த, உச்சிநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து, எதிர்க் கட்சிகள் தவறான தகவல் பரப்புவதாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறி உள்ளார்.
- புதுச்சேரி அரசின் பல்வேறு துறைகளில் ஏற்கனவே, 5 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ள நிலையில், இன்னும் பல இடங்கள் விரைவில் நிரப்பப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.
- கிறிஸ்துமஸ் திருநாள், நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்டோர், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ராக்கெட்

அமெரிக்காவின் BlueBird Block-2 தொலைத்தொடர்பு செயற்கை கோளை, இன்று, LVM-3 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்திய மண்ணில் இருந்து விண்ணில் ஏவப்பட்ட செயற்கைகோள்களில் அதிக எடை கொண்டதாக இந்த

ராக்கெட் திகழ்வதை சமூக ஊடகத்தில் பிரதமர் சுட்டிக்காட்டி, இது இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி பயணத்தில், பெருமிதமான மற்றொரு மைல்கல் என்று கூறி உள்ளார். வர்த்தக ரீதியில் செயற்கை கோள்களை விண்ணில் ஏவுதல் பற்றிய உலகச் சந்தையில் இந்தியாவின் நிலை இதனால் வலுவடைந்து இருப்பதாகவும், எல்லா துறைகளிலும் சுயசார்பை எட்டுவதற்கான இந்தியாவின் முயற்சிகளை பிரதிபலிக்கும் வகையில் இந்த சாதனை அமைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இளைஞர் சக்தியின் பங்கேற்புடன் இந்தியா, விண்வெளித் துறையில் மேலும் மேலும் முன்னேறி வருவதாகவும், இத்துறையில் இந்தியாவின் தாக்கங்கள் அதிகரித்து வருவதாகவும், மற்றொரு பதிவில் பிரதமர் கூறி உள்ளார். அதிக எடை கொண்ட செயற்கை கோள்கைளை வெற்றிகரமாக விண்ணில் ஏவ, நம்பகமான ராக்கெட்டாக, LVM-3 ராக்கெட் மேம்பட்டுள்ளதாகவும், இதனால் ககன்யான் போன்ற இந்தியாவின் எதிர்கால திட்டங்களுக்கு வலுவான அடித்தளம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<u>ராக்கெட்</u>

(வாய்ஸ்)

ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து இன்று காலை 8.55 மணிக்கு LVM-3 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அதற்கடுத்த 15 நிமிடங்களில் BlueBird Block-2 செயற்கை கோள், விண்கலத்தில் இருந்து பிரிந்து, திட்டமிட்ட சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இது, இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு, மிக முக்கிய சாதனை என்று இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தாழ்நிலை புவிவட்டப் பாதையில் செயல்படும் செயற்கைகோள் தொகுப்புகளின் ஒரு பகுதியான BlueBird செயற்கை கோள், விண்ணில் இருந்து மொபைல்

தொலைபேசிகளுக்கு, நேரடி பிராட்பேண்ட் இணைப்பு வழங்குவதில் உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். தொலைதூரப் பகுதிகளுக்கும், 4ஜி மற்றும் 5ஜி தொலைத் தொடர்பு சேவைகள் கிடைக்க இதனால் ஏதுவாகும் என்று அவர் கூறினார். அமெரிக்காவின் AST SpaceMobile நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட BlueBird செயற்கை கோள், அந்நிறுவனத்திற்கும், இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் வர்த்தகப் பிரிவான NewSpace India நிறுவனத்திற்கும் இடையிலான வர்த்தக உடன்பாட்டின் கீழ் விண்ணில் செலுத்தப் பட்டுள்ளது.

*அமைச்சரவை* (13)

டெல்லி மெட்ரோ திட்டத்தின் 5-ஏ கட்டப் பணிகளை, 12 ஆயிரத்து 15 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 13 புதிய மெட்ரோ ரயில் நிலையங்களுடன் கூடிய, 3 மெட்ரோ ரயில் பாதைகள் அமைக்கப்படும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர், புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் மெட்ரோ துறையில் புரட்சிகரமான பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் உலகிலேயே அதிக மெட்ரோ ரயில் பாதைகளைக் கொண்ட 3-ஆவது நாடாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். டெல்லி மெட்ரோ திட்டத்தினால் மக்களுக்கான போக்குவரத்து வசதிகள் மட்டுமின்றி, டெல்லி தலைநகர பிரதேசத்தின் காற்று மாசுபாடு குறையவும், ஏதுவாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மோடி-கட்டுரை

விக்சித் பாரத்-ஜி ராம் ஜி வேலை உத்தரவாத சட்டம் குறித்து மத்திய அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். கிராமப்புற மக்களின் வருமானம், கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு, வேளாண் துறையின் ஸ்திரத் தன்மை, மற்றும் நீண்டகால அடிப்படையிலான ஊரக உற்பத்தி திறனை, ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதாக அன்றி, ஒரே தொடர்ச்சியாகவே இந்த சட்டம் பார்ப்பதை, அமைச்சர் தமது கட்டுரையில் விளக்கி இருப்பதாக, பிரதமர் தெரிவித்துள்ளார். மாநில அரசுகள், தொழில் நுட்ப பயிலரங்குகள், மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் உடனான ஆலோசனை அடிப்படையில் தான், ஜி ராம் ஜி மசோதா தயாரிக்கப்பட்டது என்பதையும் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

பூபேந்திர யாதவ்

ஆரவல்லி மலைத் தொடர் குறித்த, உச்சிநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து, காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தவறான தகவல்களை பரப்புவதாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் கூறி உள்ளார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை இவர்கள் வேண்டுமென்றே தவறாகப் புரிந்து கொண்டு, சொந்த அரசியல் நலன்களுக்கு பயன்படுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டி உள்ளார். ஆகாஷ்வாணி செய்திகளுக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் எதிர்கட்சிகளின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு மக்கள் இரையாக மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். ஆரவல்லி மலைத் தொடரில் சட்ட விரோத சுரங்கப் பணிகளை தடை செய்வதே உச்சநீதிமன்றத் தீர்ப்பின் நோக்கம் என்று அமைச்சர் தெளிவுபடுத்தினார். ஆரவல்லி மலைத்தொடர் பகுதி நாட்டின் பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு அவசியமான முக்கிய கனிம வளங்களின் பிரதான ஆதாரமாகத் திகழ்வதை

திரு யாதவ் சுட்டிக் காட்டினார். ஆரவல்லி மலைத் தொடரை பாதுகாப்பதில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, முழு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆரவல்லி பசுமைச் சுவர் திட்டத்தின் கீழ், சிதைந்த நிலங்களில் பெரிய அளவிலான வனவளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். காடுகளை மீட்டெடுக்கவும், சுற்றுச்சூழல் தாங்கும் திறனை மேம்படுத்தவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

***<u>ரங்கசாமி-பணி ஆணை</u>***

புதுச்சேரி மின்துறையில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள கட்டுமான உதவியாளர்களுக்கு பணி ஆணை வழங்கும் விழா இன்று காலை கருவடிக்குப்பம் காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற்றது. துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், பணி ஆணைகளை வழங்கினர். விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், மின்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், மின்துறை செயலர் டாக்டர் முத்தம்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முதலமைச்சர் திரு ரங்கசாமி இந்நிகழ்ச்சியில் பேசுகையில் புதுச்சேரி அரசின் பல்வேறு துறைகளில் ஏற்கனவே, 5 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகவும், இன்னும் பல இடங்கள் கூடிய விரைவில் நிரப்பப்படும் என்றும் கூறினார். பொங்கலுக்குள் மாணவர்களுக்கு லேப்-டாப் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மக்களுக்கான மின்துறைகளின் பணிகளை முதலமைச்சர் பாராட்டினார். தற்போது புதிதாக ஆள் எடுக்கப்பட்டுள்ளதால் மின்துறையின் பணிகள் மேலும் சிறக்கும் என தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

**புதுச்சேரி-தொழிலாளர்**

புதுச்சேரியில் தொழிற்சங்கங்களை பதிவு செய்யவும், பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் ஆண்டு அறிக்கை தாக்கல் செய்யவும், தொழிலாளர் துறை, 2 இணைய வழி சேவைகளைத் தொடக்கி உள்ளது. முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று இப்புதிய வசதிகளைத் தொடக்கி வைத்தார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மற்றும் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**புதுச்சேரி-மரியாதை**

புதுச்சேரியில், தந்தை பெரியார் நினைவு நாள் அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது.  பிள்ளைத் தோட்டம் சந்திப்பில் உள்ள பெரியார் சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமி காந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.  தமிழக முன்னாள் முதலமைச்சர் எம் ஜி ஆர் நினைவு நாளும் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி. புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள எம் ஜி ஆர் சிலைக்கும் இவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு என்கிற குப்புசாமி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

**கிறிஸ்துமஸ்**

கிறிஸ்துமஸ் திருநாள், நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, நாடு முழுவதும் தேவாலயங்கள், வீடுகளில் கிறிஸ்துமஸ் மரம் மற்றும் குடில் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி

முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், எதிர்கட்சித் தலைவர் திரு. இரா.சிவா உள்ளிட்டோர், மாநில மக்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்து தெரிவித்துள்ளனர். கருணை மற்றும் அன்பின் வடிவான ஏசு கிறிஸ்துவின் பிறப்பும் -வாழ்வும், எளிமை, அன்பு, உண்மை, பணிவு, மன்னிப்பு, மனஉறுதி போன்ற உயரிய நற்குணங்களை மனிதகுலத்திற்கு எடுத்துரைப்பதாகவும், ஏசு கிறஸ்துவின் ஆன்ம ஒளி நமது செயல்களுக்கு வழிகாட்டி ஒற்றுமையை ஊக்குவிக்கட்டும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

__வானிலை__

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உள் தமிழகத்தில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகாலை பனி மூட்டம் அடுத்த சில நாட்களுக்கு நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ஈரோட்டில், 33.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமநிலை பகுதிகளை பொறுத்த வரை, திருத்தணியில், 17.5 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

__*சிபி ராதாகிருஷ்ணன்*__

மோடி யுகத்தில் இந்தியாவின் பொருளாதார அதிகாரம் என்ற தலைப்பில் டாக்டர் சிக்கந்தர் குமார் எழுதியுள்ள நூலை, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் பதிப்பக பிரிவு சார்பில் புதுடெல்லியில் நாளை நடைபெறும் மற்றொரு நிகழ்ச்சியில்,

மகாமானா மதன்மோகன் மாளவியா-வின் நாடாளுமன்ற உரைகள், அவர் குறித்த இதர தலைவர்களின் கருத்துக்கள், மற்றும் பெரும் எண்ணிக்கையிலான ஆவணங்களை சேகரித்து பதிப்பிக்கப் பட்டுள்ள, 12 நூல்கள் அடங்கிய தொகுப்பை, குடியரசு துணைத் தலைவர் வெளியிடுகிறார். இதே வரிசையில் முதல் 11 நூல்களின் தொகுப்பை, பிரதமர்திரு நரேந்திர மோடி கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 3-ஆம் தேதி வெளியிட்டதும் குறிப்பிடத் தக்கது.

**_மன்கிபாத்_**

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 129 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 28 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை 26 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.